1973 டிசம்பர் 3]

Rationalisation of Entertainment Tax.

* 185. *Q.*-THIRU V. ISVARMURTI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the film industry has suggested a new pattern for rationalisation of Entertainment Tax;

(*b*) if so, the nature of the suggestions; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

கேளிக்கை வரியைச் சீர்படுத்துதல்.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கேளிக்கை வரியைச் சீர்படுத்தும் புதியதோர் முறை குறித்து திரைப்படத் தொழில் அமைப்பு அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அவ்வாறு தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் எத்தகையவை ?

(உ) இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். சென்னை தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகக் கழகத்திடமிருந்து இது தொடர்பாகக் கருத்துரைகள் வந்துள்ளன.

(இ) ஒவ்வொரு காட்சிக்கும், நிலையான திரைப்பட அரங்குகளுக்கு, கொட்டகை நிறைந்த காட்சி வசூல் அளவில் 12 சதவீதமும் "டூரிங்" திரைப்பட அரங்குகளுக்கு 10 சதவீதமும் ஒருமொத்த வரியாக விதிக்கலாம் என்று தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகக் கழகம் தெரிவித்துள்ளது. கேளிக்கை வரி, காட்சி வரி, இந்த இருவகை வரியின் மீதும் விதிக்கப்படும் கூடுதல் மேல்வரி, மற்றும் கூடுதல் மேல்வரி ஆகிய வரிகளுக்குப் பதிலாக ஒருமொத்த வரி விதிக்கப்படும்.

(உ) இப்பொருள் குறித்து, வாணிக வரிச் சட்டங்களை ஒழுங்குபடுத்திச் சீரமைக்கும் சிறப்புக் கடமையில் உள்ள அதிகாரியின் கருத்துக்கள் தெரியும் வரையில், இந்நேர்வில் அரசு தமது முடிவை ஒத்திப் போட்டுள்ளது.